ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1808/4 - 2013 අප්‍රේල් මස 29 වැනි සඳුදා - 2013.04.29

*1808/4 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காடு பேணற் கட்டளைச் சட்டம்

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டம்*

**4 (2) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*கட்டளை*

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 1793/21 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியின் மூலம் ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட பதவிய ஒதுக்கத்தில் பின்வரும் அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் உட்பட்ட 12900 ஹெக்டேயார் விஸ்தீரணத்தைக் கொண்ட பகுதி 2013 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதியிலிருந்து ஒதுக்கத் தன்மையிலிருந்து இத்தால் விடுவிக்கப்படுகின்றது.*

*சுசில் பிரேமஜயந்த,*
*சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்.*

*சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு,*
*பத்தரமுல்லை,*
*2013, ஏப்பிறல் 26.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கெப்பிட்டிகொல்லாவ மற்றும் பதவிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள 12900 ஹெக்டேயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்கக் காட்டுப் பிரதேசம் -*

*வடக்கு : 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் கீழ் மகாவலி விசேட கருத்திட்ட எல்லை என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1487/32 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 9 ஆந் திகதியிட்ட அதி விசேட வர்த்தமானியின் விசேட பிரதேசங்கள் II இன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட கருத்திட்ட எல்லையின் மேற்கு எல்லை, வட மாகாணத்தையும் வட மத்திய*

மாகாணத்தையும் பிரிக்கின்ற எல்லையின் வடக்கு எல்லை சந்திக்கின்ற முனையான ஒருங்கிணைப்பு கிழக்கு 180449, வடக்கு 406663 காட்டுகின்ற முனையிலிருந்து ஆரம்பித்து இந்த முனையிலிருந்து வட மாகாணத்தையும் வட மத்திய மாகாணத்தையும் பிரிக்கின்ற எல்லையூடாக கிழக்கு நோக்கி மாஓயா கங்கையின் மத்திய முனை சந்திக்கின்ற முனையான வட மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் வட மாகாணத்தையும் பிரிக்கின்ற முனை வரையும் ;

*கிழக்கு* : வடக்கு எல்லை இறுதியில் குறிப்பிடப்படுகின்ற முனையிலிருந்து ஆரம்பித்து மாஓயா மத்திய கோட்டின் ஊடாக மேல் நோக்கி பதவிய குளக்கட்டின் ஊடாக செல்லுகின்ற பாதையின் மத்திய கோடு சந்திக்கின்ற முனை வரை தெற்குத் திசையை நோக்கியும் ;

*தெற்கு* : கிழக்கு எல்லை இறுதியில் குறிப்பிடப்படுகின்ற முனையிலிருந்து ஆரம்பித்து பதவியாவிலிருந்து கம்மில பொத்தன குளம் வரை பதவிய குளக்கட்டின் ஊடாக செல்லுகின்ற பாதையின் மத்திய கோடு ஊடாக மேற்கு நோக்கி ஒருங்கிணைப்பு கிழக்கு 195469, வடக்கு 400120 முனை சந்திக்கின்ற வரையும், இந்த முனையிலிருந்து ஒருங்கிணைப்பு 193453 மற்றும் வடக்கு 401229 காட்டுகின்ற முனை வரை வடக்கு நோக்கி நேர் கோட்டின் ஊடாகவும், இந்த முனையிலிருந்து ஒருங்கிணைப்பு கிழக்கு 192605 மற்றும் வடக்கு 400765 காட்டுகின்ற முனை வரை மேற்கு நோக்கி நேர்கோட்டின் ஊடாகவும், இந்த முனையிலிருந்து ஒருங்கிணைப்பு கிழக்கு 191808 மற்றும் வடக்கு 400617 காட்டுகின்ற முனைவரை மேற்கு நோக்கி நேர்கோட்டின் ஊடாகவும், இந்த முனையிலிருந்து ஒருங்கிணைப்பு கிழக்கு 190643 மற்றும் வடக்கு 397259 காட்டுகின்ற முனை வரை தெற்கு நோக்கி நேர் கோட்டின் ஊடாகவும், இந்த முனையிலிருந்து ஒருங்கிணைப்பு கிழக்கு 186681 மற்றும் வடக்கு 398597 காட்டுகின்ற முனையான வட மாகாணத்தையும் வட மத்திய மாகாணத்தையும் பிரிக்கின்ற எல்லை சந்திக்கின்ற முனை வரை மேற்கின் நேர் கோட்டின் ஊடாகவும் ;

*மேற்கு* : தெற்கு எல்லை இறுதியில் குறிப்பிடப்படுகின்ற முனையிலிருந்து ஆரம்பித்து வட மாகாணத்தையும் வட மத்திய மாகாணத்தையும் பிரிக்கின்ற எல்லை ஊடாக இந்த அட்டவணையின் வடக்கு எல்லை ஆரம்பிக்கின்ற முனை சந்திக்கின்ற முனை வரை வடக்கு நோக்கியுமாகும்.

விஸ்தீரணம் : 12900 ஹெக்டயார்.

5- 318

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.